**உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது விரிவான வருமானக்கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் எனபவற்றிற்கு முகாமைத்துவத்தும் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

---------------------------------------------

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாரள அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்படுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பினிவரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| 2015 நவம்பர் 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | போக்குவரத்து படிகளுக்கு உரித்தற்ற பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதி பணிப்பாளர்கள் இருவருக்கு உரிய அங்கீகாரமின்றி 2017 நவம்பர் மாதம் முதல் 2019 யூன் மாதம் வரையிலும் மாதமொன்றிற்கு ரூபா 17,500 படியாக ரூபா ரூபா 700,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த கொடுப்பனவுகள் BP/OTH/63/2017 ஆம் இலக்க ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் ஆணைக்குழுவினால் 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும், 2018 ஆம் ஆண்டின் போது அரச கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டவாறு 2019 யூலை 01 ஆந் திகதி இடம்பெற்ற ஆணைக்குழு கூட்டத்தில் இந்த கொடுப்பனவுகள் 2019 யூலை 01 ஆந் திகதி நிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்கி செயற்படவேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 69,222,613 ஆன இலாபமாக இருந்ததுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 32,601,529 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 36,621,084 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக காலக்கழிவின் பெறுமதி ரூபா 34,388,439 இனால் அதாவது 18.29 இனால் குறைவடைந்துள்ளமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| பிரதான வருமான / செலவின மூலம் | 2019 ரூபா | 2018 ரூபா | விலகல் ரூபா | விலகல் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 266,181,649 | 400,599,838 | (134,418,189) | (33.6) |
| கடன் மற்றும் முற்பணங்களின் மீதான வட்டி வருமானம் | 266,181,649 | 272,766,611 | (6,584,963) | (2.4) |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 133,929,246 | 2,221,055 | 131,708,191 | 5930.0 |
| வட்டி செலவினம் | 134,813,672 | 137,858,690 | (3,045,018) | (2.2) |
| தேறிய காலக்கழிவு | 153,588,013 | 187,976,452 | (34,388,4390 | (18.3) |
| கடன் அழிவுநட்டம் | 4,678,918 | 4,583,799 | 104,119 | 2.3 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | 2010 ஏப்ரல் 08 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிதியத்தின் பணிப்பாளராக நிரந்தர உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிராததுடன் இரட்டை அடிப்படையில் பணிப்பாளரொருவரை இணைத்துக் கொள்ள இயலுமான வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டிருக்க வில்லை. அதனால் தொடர்ச்சியாக அந்த பதவி பதிற்கடமை பதவியொன்றாக பேணப்பட்டிருந்த காரணத்தினால் செயலாற்றல் தொடர்பில் அது பாதகமாக தாக்கமளித்திருந்தது. | 2020 யூன் 05 ஆந் திகதி இது தொடர்பில் தற்போதைய நிலைமை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற தேர்தல் நிறைவடைந்த பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது பதிற்கடமை பணிப்பாளரை அதுவரையிலும் பதிற்கடமைக்காக முன்மொழிவு செய்யப்பட்டது. | நீண்டகாலமாக பதிற்கடமை பதவிகளுக்கு இணைப்புச் செய்தல் நிறுவனத்தின் செயலாற்றலில் பாதகமாக தாக்கம் ஏற்படுத்தும் என்பதனால் வெற்றிடங்களை உரிய முறையில் நிரப்ப வேண்டும். |
| (ஆ) | 1993 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1916 இன் 22 ஆம் இலக்க உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் 03 ஆம் பிரிவிற்கு முரணாக ஆணைக்குழுவின் | குறித்த பணத்தினை அறவிடுதல் தொடர்பில் 2019 திசெம்பர் 12 ஆந் திகதி அழைப்பாணை ஒன்று அனுப்பட்டிருந்ததுடன் இறுதியாக 2020 பெப்ரவரி 07 ஆந் திகதி அரச நிர்வாக அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் நினைவுறுத்தல் கடிதமொன்றும் அனுப்பப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரமின்றி முன்னாள் அமைச்சின் செயலாளரினால் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியில் பதிற்கடமை / கடமைகளை நிறைவேற்றுவதற்காக கணக்காளர் சேவையின் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அந்த உத்தியோகத்தருக்கு பதிற்கடமை சம்பளமாக ரூபா 382,056 தொகை, போக்குவரத்து படிகளாக ரூபா 522,000 தொகை மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 340,849 தொகையாக ரூபா 1,244,905 செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட பதில் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அதன்போது அந்த உத்தியோகத்தரை ஆணைக்குழுவின் கூட்டங்களிற்கு அழைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது நிதியத்தினால் ரூபா 1,916,490,000 கூட்டுப்பெறுமதியுடைய 33 கடன் செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 244,800,000 கூட்டுப்பெறுமதியுடைய 05 கடன் செயற்திட்டங்களை வெளியிடுதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதிவரையிலும் அவற்றுள் ரூபா 75,375,942 அதாவது 30.79 சதவீதம் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் கொள்கை வெளியீட்டின் பிரகாரம் ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் கடன் விடுவிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதியின் அடிப்படையில் மற்றும் கொள்வனவு செய்யும் போது பற்றுச்சீட்டின் பெறுமதியின் அடிப்படையில் இடம்பெறும். அதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகையும் விடுவிக்கப்படாததுடன் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு பகுதிகளாக கடன் விடுவித்தல் இடம்பெறும். அவ்வாறே இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 03/2018 தேசிய பாதீட்டுச் சுற்றிக்கையின் பிரகாரம் பாதீட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்தமையின் காரணமாக ஏற்பட்ட தாமதம் கடன் செலுத்துவதில் தாக்கம் அளித்திருந்தது. மேலும், உள்ளூராட்சி நிறுவனங்களில் | கடனை அங்கீகரித்ததன் பின்னர் தாமதமின்றி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கேள்வி நடைமுறையில் தாமதங்களை சுட்டிக்காண்பிக்க முடியும்.<br><br>எதிர்காலத்தில் நிதியத்தின் கடன்கொள்கை கூற்றினை மாற்றியமைத்து கடன் விடுவிப்பதினை செயற்திறனாக்குவதற்கு முகாமைத்துவம் கலந்துரையாடியவாறு உள்ளது. | |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் நிதியத்தினால் 124 கடன்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 31 சதவீதம் அதாவது 38 கடன்கள் விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. | மேற்படி (அ) பதிலுடன் இணங்குகின்றது. | நிதியத்தின் பிரதான செயற்பாடானது உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு கடன் வழங்குவது என்பதனால் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகுதியினை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 19 செயற்திட்டங்களின் ரூபா 419,177,427 கூட்டுப்பெறுமதியுடைய கடன்கள் செயற்படாத கடன்களாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த கடனை செலுத்தாதுள்ள காலமானது 2 ½ வருடங்கள் முதல் 21 வருடங்கள் வரையான காலவீச்சினை கொண்டிருந்தது. மேலும், ரூபா 260,624,776 தொகையான கடன் மீள்கட்டமைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 158,552,651 ஆன கடனை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நீங்கள் சுட்டிக்காண்பித்ததன் பிரகாரம் ரூபா 150.8 மில்லியன் நிதியத்தின் கண்காணிப்பின்றி வேறு செயற்திட்டங்கள் மூலம் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், பொதுத்திறைசேரிக்கு கடன் செலுத்தும் பொறுப்பானது உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு சாட்டப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், நிலுவைக் கடனை அறவிடுவதற்காக நேரடியாகத் தலையிட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டு ரூபா 1,400 மில்லியனாக காணப்பட்ட அந்த நிலுவைக் கடன் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 158.5 மில்லியன் வரை குறைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக நிலுவை கடனை அறவிடுவதற்கு ஆணைக்குழுவின் தலையீடு மற்றும் கண்காணிப்பின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிலுவைக் கடனை அறவிடும் நடைமுறையை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| வழிகாட்டியின் தேவைப்பாடு தொடர்பில் கற்கையொன்றினை மேற்கொள்ளாததுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் நியமங்கள் இன்றியும் ஒப்பீட்டு விலை பொறிமுறைமையின் கீழ் கூறுவிலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு நிதியத்திற்காக வழிகாட்டி ஒன்றினை தயாரிப்பதற்காக பிணைவைப்பற்ற ரூபா 200,000 முற்பணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. வழிகாட்டி நூல்களின் பொருண்மைத் தன்மை மற்றும் போதியளவான தன்மை தொடர்பில் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளாது செலுத்தவுள்ள எஞ்சியுள்ள தொகையில் 50 சதவீதமான ரூபா 100,000 ஆன தொகை கட்டுப்பாட்டுச் சபையின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பெறுகைகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பெறுகைகள் சுற்றறிக்கையை பின்பற்ற வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான "ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்" பிரகாரம் மீளாய்வாண்டிற்குரியதாக நிதியத்தினால் தமது விடயப்பரப்பின் கீழ் உள்ளடக்கப்படாத பணிகள் தொடர்பில் அறிந்திராததுடன் அதன் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகளினை அளவிடும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தின் செயற்திறனுக்கு உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை தெரிவு செய்துள்ளதுடன் அவற்றை வருடாந்த செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தியுள்ளது. வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் உரிய ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு உரிய உத்தியோகத்தர் களுக்கு பொறுப்புக்கள் சாட்டப்படும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல். |